25.06.2025



<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.49/2023</u>

<u>வா.சா. 1–தனம் என்கிற தனபாக்கியம், க/பெ.காளிதாஸ்</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் தாக்கல் செய்த என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை எனது வழக்கறிஞரிடம் என் கணவர் தான் தெரிவித்தார். இவ்வழக்கினை நான் பிரதிவாதிக்கு 10 அடி பாதை இல்லை என்பதற்காக தான் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்குரிய சர்வே எண் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் எனது தகப்பனார் பனையடியான் என்பவருக்கு பாத்தியப்பட்டது. தாவா சொத்து உட்பட இதர சொத்துக்களை எனது தகப்பனார் மற்றும் என்னுடைய சகோதரர்கள் பெரியசாமி மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் நான் திருமணம் செய்வதற்கு முன்பாகவே 1980ம் ஆண்டு பாகம் பிரித்துக் கொண்டார்கள். இவ்வாறு பாகம் பிரிவினை செய்ததன் அடிப்படையில் தாவா சொத்து என்னுடைய சகோதரர் பெரியசாமிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். பெரியசாமி தற்போது உயிருடன் இல்லை.

பெரியசாமி மனைவி சித்ரா உயிருடன் உள்ளார். பெரியசாமியின் மகள் தான் பிரதிவாதி செல்வராணி என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் பெரியசாமி மனைவி சித்ராவை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். எனது தாயார் அங்கம்மாள், பாலசுப்பிரமணியனுக்கு எதிராக ஒரு வழக்கும், பெரியசாமிக்கு எதிராக மற்றொரு வழக்கும் தாக்கல் செய்துள்ளார், ஆனால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தாயார் பெரியசாமிக்கு எதிராக துறையூர், நீதிமன்றத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார், ஆனால் அந்த வழக்கு எண் எனக்கு தெரியாது. எனது தாயார் பெரியசாமியின் மீது ஜீவனாம்சம் கொடுக்க கோரியும், அவ்வாறு ஜீவனாம்சம் கொடுக்கவில்லை என்றால் சொத்து வழங்கக்கோரி அந்த வழக்கை தாக்கல் செய்தார். இந்த பெரியசாமியின் மீது தாக்கல் செய்த இந்த வழக்கு நகலை ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கின் என்ன தீர்ப்பு ஏற்பட்டது தெரியுமா என்றால் தெரியாது. ஆனால் சொத்து பவர் கேட்டு தாக்கல் செய்திருந்தார். நான் தவறாக சொல்கின்றேன், எனது தாயார் சொத்தை கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை, ஜீவனாம்சம் மட்டும் கேட்டு தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 23.11.2013 தேதி அசல் வழக்கு எண்.120/1992 வழக்கில் சமாதானம் மூலம் பாகம் பிரித்து கொண்ட

25.06.2025



உத்தரவு நகல் வா.சா.ஆ.1 இந்த ஆவணத்தில் சொல்லியுள்ளவாறு ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. அசல் வழக்கு எண்.14/1999 வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பின் படி தாவா சொத்தை வழக்கறிஞர் ஆணையர் மூலம் பிரித்து சுவாதீனம் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 28.04.2016 ம் தேதியிட்ட ஜீவனாம்சம் ஒப்படைப்பு நமூனாவின் 1 வது அயிட்ட சொத்தாக சொல்லப்பட்ட சர்வே எண்.204/5 ல் 74 செண்ட் என தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு 49/2023 வழக்கை பொறுத்து எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரிதான். என் தாயார் வழக்கு சொத்தை பொறுத்து எந்த தேதியில் வா.சா.ஆ.6 உயில் எழுதிவைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணம் உயிலில் யார் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. உயில் எழுதும் போது நான் அங்கு இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தை உங்களுக்கு யார் கொடுத்தார் என்றால் என் தாயார் தான் கொடுத்தார். எப்பொழுது கொடுத்தார் என்ற விவரம் தெரியாது, உயிருடன் இருக்கும்போதே என்னிடம் கொடுத்துவிட்டார். என் தாயாருக்கு பிரிந்த வழக்கு சொத்து உட்பட அனைத்து சொத்துக்களையும் பொறுத்து தான் வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தை எழுதிவைத்தார்.

25.06.2025



வழக்கு சொத்தான 24 செண்ட் நிலத்தை பற்றி வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தில் சொல்லியுள்ளாரா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியவில்லை. ஆனால் இந்த வழக்கை வா.சா.ஆ.6 உயில்படி எனக்கு பாத்தியப்பட்டது என சொல்லி தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். என் தாயார் அவருக்கு பாத்தியப்பட்டாத வழக்கு சொத்தை பொறுத்து வா.சா.ஆ.6 உயில் சாசனம் எனக்கு எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வா.சா..6 உயில் சாசனத்தில் சொல்லியுள்ள சொத்துக்களை இந்த ஆவணம் எழுதும் காலத்திலேயே அவர் தான் அனுபவித்து இருந்தார் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணப்படி தாவா சொத்து 2016ம் ஆண்டு தான் ஒப்படைப்பு செய்யப்பட்டது, அதற்கு முன்பே 2009ம் ஆண்டே வா.சா.ஆ.6 ஆவணம் இந்த சொத்தை பொறுத்து செல்லத்தக்கதல்ல ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தை ஏற்படுத்தும் போது தாவா சொத்தில் என் தாயார் சுவாதீனத்தை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2016ம் ஆண்டு தான் தாவா சொத்து என்னுடைய தாயாருக்கு அனுபவம் கொடுக்கப்பட்டது, அதற்கு முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.6 ஆவணத்தை எழுதிவைக்க என் தாயாருக்கு சட்டப்படி எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சொத்து கிடைத்த பிறகு தான் வா.சா.ஆ.6 ஆவணத்தை என் தாயார் எனக்கு எழுதிவைத்தார். என் தாயாருக்கு என்னுடைய அக்கா செல்லம்மாள் மற்றும் நான் ஆகிய இருவரும் தான் வாரிசுகள், இதற்காக தான் வா.சா.ஆ.3 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய சகோதரர் பெரியசாமி, பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் என் தாயாருக்கு வாரிசா என்றால் வாரிசு தான் ஆனால் அவர்கள் இறந்துவிட்டார்கள். பெரியசாமி மற்றும் பாலசுப்பிரமணியன் ஆகியோர்கள் இறந்துவிட்டதால் அவருடைய வாரிசுகள் என் தாயாருக்கு சட்டப்படியான வாரிசுகள் என்று சொன்னால் பாலசுப்பிரமணியனுக்கு குழந்தைகள் கிடையாது, பெரியசாமிக்கு மகள் செல்வராணி உள்ளார், பெரியசாமியின் மனைவி சித்ராவும் உயிருடன் இருக்கிறார். என்னுடைய தாயாருக்கு இறந்துபோன என் அண்ணன் பெரியசாமி மனைவி சித்ரா மற்றும் மகள் செல்வராணி ஆகியோர்கள் வாரிசுகள் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தை பிரதிவாதிக்கு பங்குள்ளதை மறைத்து தவறான வழியில் அடையவேண்டும் என்ற எண்ணத்தை கொண்டு என் தாயார் மூலம் எழுதிக்கொண்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை வழக்கறிஞர் ஆணையர் பிரித்து ஒப்படைப்பு செய்ததாக நான் சொன்னதற்கு அவ்வாறு அந்த வழக்கறிஞர் ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை ஆவணமாக

தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான்தவறாக சாட்சியம் அளிக்கிறேன், அவ்வாறு வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு தாவா சொத்தில் பாதை பாத்தியம் உள்ளதென்று தெரியவரும் என்பதால் வேண்டுமென்றே அந்த வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்து சர்வே எண்.204/5 ஆதியில் பெரியசாமிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பெரியசாமி தாவா சொத்துக்கு மேல்புறம் உள்ள மயான பாதை வழியாக தான் சென்று சர்வே எண்.204/5 சென்றடைவார் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்கு பக்கத்தில் தான் பிரதிவாதி செல்வராணிக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால் சரிதான். செல்வராணி அவருடைய வயலுக்கு எதன் வழியாக செல்வார் என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்தை நான் பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். தாவா சொத்து கிரையத்தொகை ரூபாய் பத்து இலட்சத்தை என் தாயாருக்கு கொடுத்து வாங்கினேன். அவ்வாறு கிரையம் கொடுத்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. அந்த ஆவணத்தை தாக்கல் செய்வதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் உள்ளதா என்றால்

25.06.2025



அதெல்லாம் ஒன்றும் இல்லை. பிரதிவாதி எந்த தேதியில் தாவா சொத்திற்குள் அத்துமீறி நுழைந்து பாதை அடைப்பதற்காக முயற்சித்தார் என்று சொன்னால் தேதி எனக்கு தெரியாது, ஆனால் படம் பிடித்து சிடியாக தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.9 சிடி ஆவணத்தை போட்டு பார்த்தீர்களா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ஆவணத்தில் உள்ள விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான், பிரதிவாதி வண்டி ஓட்டிச்சென்ற விவரம் எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கிற்கு வழக்குமூலமாக 05.02.2023 ம் தேதி ஏற்பட்டதாக தவறாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் நான் பிரதிவாதி 18.02.2023 ம் தேதி மற்றும் வழக்குமூலத்தில் 05.02.2023 ம் தேதி ஆகிய மாறுபட்ட தேதிகளில் பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி நுழைந்து பாதை அமைக்க முயற்சித்தார் என்று முன்னுக்கு முன்முரணாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி செல்வராணி 22.01.2023 ம் தேதியன்று அவருடைய நிலத்தில் நெல் அறுவடை செய்துவிட்டார், அதை நான் தடுக்க முயற்சித்ததால் செல்வராணி 19.01.2023 ம் தேதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். இந்த புகாருக்கு பின் பிரதிவாதி நான் வெல்லாமை வைத்திருந்த நிலத்தில் வண்டி விட்டு அடித்தார். வா.சா.ஆ.6 ஆவணம் செல்லத்தக்க ஆவணம் அல்ல,

25.06.2025



வழக்கிற்கு வழக்குமூலமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு சொத்தின் பிரதிவாதிக்கு சமபங்கு உண்டு என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வழக்கு சொத்தை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்து கொண்டு தகராறு செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல, நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. சாட்சி பிரதிவாதி வழக்கறிஞர் கேள்விகளை புரிந்து கொள்ளாமல் கேள்வி கேட்கிறார் என்று சொன்னால் விசாரணை நிறுத்திவைக்கப்படுகிறது.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.T.அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.